உ

# அருள்மிகு பெரியநாயகியம்மன் திருக்கோயில், பழநி

பழநி வட்டம், திண்டுக்கல் மாவட்டம்,

(பழநி, அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயிலின் உபகோயில்)

# திருக்குட நன்னீராட்டுப் பெருவிழா அழைப்பிதழ்



திரு ஞானங் குழைந்த அருளின் சேய்க் கருளும்
பெருங் கருணைத் திருக்கை போற்றி
வருஞானம் பலபொழிந்து வளர் ஞானம்
கொழிக்கும் கை வண்மை போற்றி
பெரு ஞானம் பிறக்கும் அருட்சேவடியாம்
கமலப்பூப்பிரசம் பதம் போற்றி
மரு ஞானம் தருபழநி ப்பெரியநாயகி
அம்மை மலர்த்தாள் போற்றி! போற்றி!

- பெரியநாயகி மாலை

**நாள் : 24-11-2017 வெள்ளிக்கிழமை**

**நேரம் : காலை 6.15 மணிக்குமேல் 7.45 மணிக்குள்**

உ

நாயகி நான்முகி, நாராயணி, கை நளின பஞ்ச
சாயகி சாம்பவி, சங்கரி, சாமளை, சாதி நச்சு
வாயகி, மாலினி, வாராகி, சூலினி, மாதங்கி என்று
ஆயகியாதி உடையாள் சரணம் அரண் நமக்கே.

- அபிராமி அந்தாதி

tnhrce.org

## மெய்யன்புடையீர்!

இறை வழிபாடு ஒன்றே இடும்பை இலாத இன்பத்தை வழங்கி நல்வாழ்வை பெறச்செய்வது. ஆதியும் அந்தமுமில்லாத அருட்பெருஞ்சோதியாய் எங்கும் பூரணமாய் நிறைந்துள்ள பரம்பொருள் ஆன்ம கோடிகளுக்கு அருள் செய்யும் பொருட்டு மூர்த்திவடிவம் கொண்டு தீராத வினைகள் எல்லாம் தீர்த்தருளும் கலியுகவரதனாய் அருள்மிகு ஞானதண்டாயுதபாணியாய் எழுந்தருளியிருக்கின்ற ஆறுபடை வீடுகளில் ஒன்றும், வழிபடும் பக்தர்களுக்குப் பேறளிப்பதுமாகிய இப்புண்ணிய பழநித் திருத்தலத்தில் பழனி நகரின் மேற்குப் பக்கத்திலே கிழக்கு நோக்கி அமைந்து பெருமிதமாக விளங்குவது இல்லார் யாவர்க்கும் நன்மை ஈயும் பெருங்குணத்தாள் அருள்மிகு பிரஹந்நாயகி என்ற பெரியநாயகியம்மை திருத்தலமாகும். இத்திருக்கோயில் உண்மை, அறிவு, இன்ப வடிவினராகிய, அருள்மிகு சோமாஸ் கந்த மூர்த்தியின் அருள் தத்துவத்தை விளக்குகின்றது.

சந்நிதி அமைப்பு முறையில் முதலில் பெரியநாயகியம்மையார், நடுவில் வள்ளி தேவசேனாவுடன் முருகப்பெருமான், அதனை அடுத்து கைலாசநாதப் பெருமான் என தந்தை, தாய், குழந்தை என இல்லறத்தின் முப்பொருள் தன்மையை முழுமையாக விளக்கும் சோமாஸ்கந்தர் தத்துவத்தை உணர்த்தும் வண்ணம் சந்நிதிகள் யாவும் அமைந்துள்ளன. இவைகளுக்குத் தென்பக்கத்தே அழகிய ஒரு பெருமண்டபத்தில் அருள்மிகு முத்துக்குமாரசுவாமி சந்நிதி உள்ளது. வடபாகத்தே தெற்கு நோக்கிய நடராஜர் திருத்தளியும் எடுப்பிக்கப்பட்டுள்ளது. இத்திருக்கோயிலின் நுழைவாயிலில் உள்ள நவரங்க மண்டபத்தின் இருமருங்கிலும் நிற்கும் தூண்களிலே அழகிய சிவத்திரு மேனிகளும், திருப்பணி செய்தார் தம் உருவங்களும் செதுக்கப்பட்டுள்ளன. அவற்றுள்ளே சிவபெருமான் ஆடிய ஊர்த்துவத் தாண்டவக் கோலமும் அக்கூத்தினைக் காளியம்மை கண்டு அகந்தை ஒழிந்த நடனத் தோற்றமும் எதிரெதிரே அமைக்கப்பட்டுள்ளமை மிகவும் போற்றுதற்குரியவாகும்.

பொன்னார் மாட, நீடு மதில் திருச்சுற்று, தேர்ஆரோகண நான்கு ரதவீதியுடன் மாமண்டபம், திருமாளிகைப்பத்தி, உற்சவ யாகசாலை, வாத்ய மண்டபம், ஸ்நபன மண்டபம், அலங்கார மண்டபம், வசந்த மண்டபம், வாகன, ரத, சீர்பாத மண்டபம், யானைக்கொட்டில், கோசாலை, உக்ராண சாலை என உத்தமமாய் அனைத்தும் அழகுற அமைந்துள்ளதும் நித்திய பூஜை, நைமித்திக பூஜை, வார பூஜை, மாதபூஜை, பண்டிகைப் பூஜை, மஹோத்சவங்கள், பிரம்மோற்சவங்கள், வேதசிவ ஆகம முறைப்படி திருத்தமுற, விதிமுறைப் பிறழாது நிகழ்வுற்று வருகின்றதும், பழனி அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமியின் மிகப்பெரும் திருவிழா உற்சவங்கள் யாவும் அருள்மிகு பெரியநாயகியம்மன் திருக்கோயிலில் தான் அக்காலம் தொட்டு நடைபெற்று வருவது சிறப்புமிக்கதாகும்.

இத்திருக்கோயில் முழுவதும் தற்பொழுது சிற்ப ஆகம முறைப்படி திருத்தமுற திருப்பணி செய்யப்பட்டு புத்தாக்கம் பெற்றுள்ள இத்திருத்தலத்தின் **திருக்குட நன்னீராட்டுப் பெருவிழா**

**நிகழும் மங்களகரமான ஹேவிளம்பி வருடம், திருவள்ளுவராண்டு 2048, கார்த்திகை மாதம் 8-ம் நாள் (24-11-2017) வெள்ளிக்கிழமை சஷ்டி திதியும், உத்தராடம் நட்சத்திரமும், சித்த யோகமும் கூடிய சுபயோக சுபதினத்தில் காலை 6.15 மணிக்கு மேல் 7.45 மணிக்குள் விருச்சிக லக்னத்தில் சுபவேளையில் வையகமும், வானகமும் வாழ்த்திசைத்திட கோலாகலமாக நிகழ்வுற திருவருள் கூட்டுவித்துள்ளது.**

இந்த இனிய விழா மங்கலத்தில்

மாண்புமிகு வனத்துறை அமைச்சர்

திரு. **திண்டுக்கல் சி.சீனிவாசன்** அவர்கள்

மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர்

திரு. **சேவூர் எஸ்.ராமச்சந்திரன்** அவர்கள்

திரு. **அபூர்வ வர்மா** இ.ஆ.ப.,
முதன்மை செயலாளர், சுற்றுலா பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை, சென்னை.

டாக்டர். **டி.ஜி.வினய்** இ.ஆ.ப.,
மாவட்ட ஆட்சித்தலைவர்,
திண்டுக்கல்.

திரு. **இரா.சக்திவேல்** இ.கா.ப.,
மாவட்ட காவல் கண்காணிப்பாளர்,
திண்டுக்கல்.

திரு. **எம்.உதயக்குமார்**
நாடாளுமன்ற உறுப்பினர்,
திண்டுக்கல்.

திரு. **ச.அருண்ராஜ்** இ.ஆ.ப.,
சார் ஆட்சியர்,
பழநி.

திரு. **இ.பெ.செந்தில்குமார்**
சட்டமன்ற உறுப்பினர்,
பழநி.

திருமதி. **த.கார்த்திகேயனி**
கண்காணிப்புப் பொறியாளர்,
இந்து சமய அறநிலையத்துறை, சென்னை.

திரு. **இரா.பச்சையப்பன்**
இணை ஆணையர்,
இந்து சமய அறநிலையத்துறை, மதுரை.

திருமதி. **ஆர்.ஜெயா** இ.ஆ.ப.,
ஆணையர், இந்து சமய அறநிலையத்துறை,
சென்னை.

திரு. **க.கார்த்திகேயன்** இ.கா.ப.,
காவல்துறை துணைத்தலைவர்,
திண்டுக்கல்.

திருமதி. **ந.திருமகள்**
கூடுதல் ஆணையர்(பொது),
இந்து சமய அறநிலையத்துறை, சென்னை.

திருமதி. **மா.கவிதா**
கூடுதல் ஆணையர்(திருப்பணி),
இந்து சமய அறநிலையத்துறை, சென்னை.

திரு. **ஆர்.சுதர்சன்**
கூடுதல் ஆணையர் (விசாரணை) கூ.பொ.
இந்து சமய அறநிலையத்துறை, சென்னை.

திருமதி. **சி.ஹரிப்ரியா**
இணை ஆணையர் (தலைமையிடம்)
இந்து சமய அறநிலையத்துறை, சென்னை.

முனைவர் **ந.தனபால்**
இணை ஆணையர் (சரிபார்ப்பு) தலைமையிடம்
இந்து சமய அறநிலையத்துறை, சென்னை

திரு. **பி.ஆர்.அசோக்**
இணை ஆணையர் (சட்டம்) தலைமையிடம்
இந்து சமய அறநிலையத்துறை, சென்னை

tnhrce.org

மற்றும் அரசு அலுவலர்கள், பொதுமக்கள் கலந்து கொண்டு சிறப்பிக்க உள்ளார்கள். தாங்களும் இத்திருக்குட நன்னீராட்டு பெருவிழாவில் கலந்து கொண்டு அருள்மிகு பெரியநாயகியம்மன் திருவருளை பெற்றுய்யுமாறு அன்புடன் வேண்டுகிறோம்.

இங்ஙனம்

**இரா.மேனகா**
உதவி ஆணையர்/நேர்முக உதவியாளர்
துணை ஆணையர், (முழு கூடுதல் பொறுப்பு)

**சீ.செல்வராஜ்**
இணை ஆணையர்/செயல் அலுவலர்/தக்கார்

# நிகழ்ச்சி நிரல்

## ஸ்ரீ ஹேவிளம்பி வருடம்

### கார்த்திகை மாதம் 4-ம் நாள் 20.11.2017 திங்கட்கிழமை

காலை 6.00 மணிக்கு - மங்கள இசை, அனுக்ஞை, விநாயகர் பூஜை, சங்கல்பம், புண்யாஹவாசனம், பஞ்சகவ்ய பூஜை, மஹா கணபதி ஹோமம், நவக்கிரஹ ஹோமம், தேவதானுக்ஞை, தீபாராதனை, பிரசாதம் வழங்குதல்.

மாலை 5.00 மணிக்கு - மங்கள இசை, பிரவேச பலி, ரக்ஷோக்ன ஹோமம்.

மாலை 7.00 மணிக்கு - வாஸ்து சாந்தி

### கார்த்திகை மாதம் 5-ம் நாள் 21.11.2017 செவ்வாய்கிழமை

tnhrce.org

காலை 8.00 மணிக்கு - மங்கள இசை, தீர்த்தஸங்க்ரஹணம், அக்னிஸங்க்ரஹணம்.

காலை 10.30 மணிக்கு - பிரசன்னாபிஷேகம்.

மாலை 4.45 மணிக்கு - மங்கள இசை, மிருத்ஸங்க்ரஹணம்.

மாலை 6.00 மணிக்கு - அங்குரார்பணம், காப்பு கட்டுதல், கும்ப அலங்காரம், கலாகர்ஷணம், யாகசாலை பிரவேசம், முதற்கால யாகசாலை பூஜை ஆரம்பம், திரவியாகுதி.

இரவு 9.00 மணிக்கு - பூர்ணாகுதி, தீபாராதனை, உபசாரம், திருமறை திருமுறை விண்ணப்பம், தீபாராதனை, பிரசாதம் வழங்குதல்.

### கார்த்திகை மாதம் 6-ம் நாள் 22.11.2017 புதன்கிழமை

காலை 7.00 மணிக்கு - மங்கள இசை, இரண்டாம் கால யாகசாலை பூஜை ஆரம்பம், விசேட சந்தி, வேதிகாபூஜை, திரவியாகுதி.

காலை 10.30 மணிக்கு - பூர்ணாகுதி, தீபாராதனை, உபசாரம், திருமறை திருமுறை விண்ணப்பம், தீபாராதனை, பிரசாதம் வழங்குதல்.

மாலை 5.00 மணிக்கு - மங்கள இசை, மூன்றாவது கால யாகசாலை பூஜை ஆரம்பம், விசேட சந்தி, வேதிகா பூஜை, திரவியாகுதி.

இரவு 8.00 மணிக்கு - பூர்ணாகுதி, தீபாராதனை, உபசாரம், திருமறை திருமுறை விண்ணப்பம், தீபாராதனை, பிரசாதம் வழங்குதல்.

## கார்த்திகை மாதம் 7-ம் நாள் 23.11.2017 வியாழக்கிழமை

| | | |
|---|---|---|
| காலை 7.45 மணிக்கு | - | மங்கள இசை, நான்காவது கால யாகசாலை பூஜை ஆரம்பம், விசேட சந்தி, வேதிகா பூஜை. |
| காலை 8.30 மணிக்கு | - | புதிய விநாயகருக்கு ஜலாதிவாசம், தான்யாதி வாசம், கண் திறத்தல் முதலான நிகழ்ச்சிகள். |
| காலை 9.00 மணிக்கு | - | பரிவார மூர்த்திகளுக்கு அஷ்டபந்தன மருந்து சாற்றுதல் ஆரம்பம், திரவியாகுதி. |
| காலை 10.30 மணிக்கு | - | பூர்ணாகுதி, தீபாராதனை, உபசாரம், திருமறை திருமுறை விண்ணப்பம், தீபாராதனை, பிரசாதம் வழங்குதல். |
| காலை 11.45 மணிக்கு | - | மூலஸ்தான பிரதான மூர்த்திகளுக்கு அஷ்டபந்தன மருந்து சாற்றுதல். |
| மாலை 5.00 மணிக்கு | - | மங்கள இசை, ஐந்தாம் கால யாகசாலை பூஜை ஆரம்பம், விசேட சந்தி, வேதிகா பூஜை. |
| மாலை 7.00 மணிக்கு | - | லட்சுமி பூஜை. |
| இரவு 8.00 மணிக்கு | - | திரவியாகுதி, பூர்ணாகுதி, தீபாராதனை, உபசாரம், திருமறை திருமுறை விண்ணப்பம், தீபாராதனை, பிரசாதம் வழங்குதல். |

tnhrce.org

## கார்த்திகை மாதம் 8-ம் நாள் 24.11.2017 வெள்ளிக்கிழமை

| | | |
|---|---|---|
| அதிகாலை 3.30 மணிக்கு | - | மங்கள இசை, ஆறாவது கால யாகசாலை பூஜை ஆரம்பம், பிம்ப சுத்தி, காப்பு கட்டுதல், நாடீ சந்தானம், ஸ்பரிசாகுதி. |
| காலை 5.30 மணிக்கு | - | பூர்ணாகுதி, தீபாராதனை. |
| காலை 6.00 மணிக்கு | - | யாத்ரா தானம், யாகசாலையிலிருந்து கலசங்கள் புறப்படுதல். |
| காலை 6.45 மணிக்கு | - | **அருள்மிகு பெரியநாயகியம்மன், அருள்மிகு கைலாசநாதர், அருள்மிகு வள்ளிதேவசேனாசமேத முத்துக்குமாரசுவாமி, அருள்மிகு நடராஜர் மற்றும் பரிவார விமானங்கள் சமகால மகாகும்பாபிஷேகம்.** |
| காலை 7.15 மணிக்கு | - | **அருள்மிகு பெரியநாயகியம்மன், அருள்மிகு கைலாசநாதர், அருள்மிகு வள்ளிதேவசேனாசமேத முத்துக்குமாரசுவாமி, அருள்மிகு நடராஜர் மற்றும் பரிவார மூர்த்திகள் மூலஸ்தான மகாகும்பாபிஷேகம்.** |

நண்பகல் 12.00 மணிக்கு - மகாபிஷேகம், மகாநைவேத்யம், மகாதீபாராதனை.

மாலை 5.30 மணிக்குமேல் - 7.00 மணிக்குள் - **அருள்மிகு பெரியநாயகி பிரஹதீஸ்வர கைலாச நாதர் திருக்கல்யாணம்** மற்றும் **அருள்மிகு வள்ளி தேவசேனா சமேத முத்துக்குமாரசுவாமி திருக்கல்யாணமும்** நடைபெறும்

இரவு 8.00 மணிக்கு - **பஞ்சமூர்த்திகள் புறப்பாடு.**

tnhrce.org

பிரதான ஆசார்யர்
சிவஸ்ரீ. **க.அமிர்தலிங்க குருக்கள்**
ஸ்தவராஜ பண்டிதர் (பொ)
திருக்கோயில், பழநி.

சர்வ சாதகம்,
பழநி அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி
தேவஸ்தான அர்ச்சக ஸ்தானீகர்,
சிவாகம சிரோமணி, ஆகம வித்யாரத்னம்,
சிவாகம கல்பதரு
சிவஸ்ரீ. **அ.செல்வசுப்ரமண்ய சிவாசார்யார்**

அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில் ஸ்தானீக ஸ்தல அர்ச்சகர்கள்

வேள்விச்சாலை வழிபாட்டு நேரங்களில் திருமறை, சிவாகமங்கள், திருமுறைகள் முதலியன தொடரோதுதல் நடைபெறும்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அன்னதானத் திட்டம் நாள்தோறும் 100 நபர்களுக்கு பழநி, அருள்மிகு பெரியநாயகியம்மன் திருக்கோயிலில் 16-01-2006 ம் நாள் முதல் தொடங்கப்பட்டு சிறப்பாக நடைபெற்று வருகிறது.

---

## பிளாட்டினம் அட்டைத் திட்டம்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க திருக்கோயிலுக்கு ரூ.1 கோடி மற்றும் அதற்கு மேல் நன்கொடை வழங்குவோர்க்கு "பிளாட்டினம் அட்டை" வழங்கப்படும். அப்பிளாட்டினம் அட்டை மூலமாக நன்கொடையாளர் குடும்பத்தார் தமிழகத்தின் அனைத்து திருக்கோயில்களிலும் 10 நபர்களுக்கு மிகாமல் 20 வருடங்களுக்கு சிறப்பு தரிசனம் செய்ய முன்னுரிமை வழங்கப்படும்.

## வைர அட்டைத் திட்டம்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க அன்னதானத்திட்டத்திற்கு குறைந்தபட்சம் ரூ.7 லட்சம் நன்கொடை வழங்குவோர்க்கு "வைர அட்டை" வழங்கப்படும். அவ் வைர அட்டை மூலமாக தமிழகத்தின் அனைத்து திருக்கோயில்களிலும் நன்கொடையாளர் குடும்பத்தார் 7 நபர்களுக்கு மிகாமல் 20 வருடங்களுக்கு சுவாமி தரிசனம் செய்ய முன்னுரிமை வழங்கப்படும்.

# அன்னதானத் திட்ட நன்கொடை வேண்டுகோள் அறிவிப்பு
# மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின்
# நாள்முழுவதும் அன்னதானம் வழங்கும் திட்டம்

பழநி அருள்மிகு தண்டயுதபாணி சுவாமி திருக்கோயிலில் 13.09.2012 முதல் நாள் முழுவதும் அன்னதானம் வழங்கும் திட்டம் தொடங்கப்பட்டு சிறப்பாக செயல்பட்டு வருகின்றது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் 100 நபர்களுக்கான அன்னதானத் திட்டம் 23.02.2002 முதல் தொடங்கப்பட்டும், பின்னர் நாள்முழுவதும் அன்னதான திட்டம் 13.09.2012 தொடங்கப்பட்டு சிறப்பாக நடைபெற்று வருகிறது. 100 நபர்களுக்கான அன்னதானத் திட்டத்தில் பங்கு பெறுபவர்கள் அன்னதானத் திட்டம் கட்டளை முதலீடாக ரூ.25,000/- மற்றும் முதலாம் ஆண்டு அன்னதான செலவுத் தொகையாக ரூ.2,500/-ம் ஆக மொத்தம் ரூ.27,500/- செலுத்தி இத்திட்டத்தில் பங்கு கொள்ளலாம்.

tnhrce.org

அன்பர்கள் தங்களுடைய பிறந்த நாள், திருமண நாள், மனைவி, மக்கள் மற்றும் பெற்றோர்கள் பிறந்த நாள் போன்ற முக்கிய நாட்களிலும் மற்றும் அவரவர் விரும்பும் நாட்களிலும் அன்னதானம் செய்வதற்கு இத்திட்டத்தில் பணம் செலுத்தி அன்னதானம் செய்யலாம்.

## திருக்கோயில் பஞ்சாமிர்தம்

பழநி அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமியின் அருட்பிரசாதமான பஞ்சாமிர்தம் தரமான மூலப்பொருட்களைக் கொண்டு தானியங்கி இயந்திரங்கள் மூலம் தயார் செய்யப்பட்டு திருக்கோயில் பிரசாதமாக 500 கிராம் டாப்பா ரூ.35/- மற்றும் ரூ.40/-, 250 கிராம் டின் 12 எண்ணம் கொண்ட கிப்ட் பாக்ஸ் ரூ.300/- மற்றும் 250 கிராம் டின் ஒன்றுக்கு ரூ.30/- என கீழ்க்கண்ட திருக்கோயில் விற்பனை நிலையங்களில் விற்பனை செய்யப்படுகிறது.

1. மலைக்கோயில் பிரதான விற்பனை நிலையம்.
2. மலைக்கோயில் தெற்கு வெளிப்பிரகாரத்தில் உள்ள மூன்று விற்பனையகங்கள்.
3. மின் இழுவை இரயில் கீழ் நிலையம்.
4. கம்பிவட ஊர்தி கீழ் நிலையம்.
5. பாதவிநாயகர் கோயில் அருகில் மற்றும் எதிர்புறம்.
6. மங்கம்மாள் மண்டபம்.
7. பேருந்து நிலையம் தகவல் நிலையம்

நன்கொடை - வங்கி வரைவோலைகள் அனுப்ப வேண்டிய முகவரி

**இணை ஆணையர் / செயல் அலுவலர்**

அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில், பழநி - 624 601, திண்டுக்கல் மாவட்டம்.

திருக்கோயில் website : palanimurugantemple.tnhrce.in Email : palanimurugan@tnhrce.org

Tel : 04545 - 242236 Fax : 04545 - 247765



அருள்மிகு வள்ளிதேவசேனாசமேத முத்துக்குமாரசுவாமி